பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 02 2026** **7 15**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் இன்று முதல் இந்தியாவில் **3** நாள் பயணம் மேற்கொள்கிறார்.

2. இந்தியா - ஃபிரான்ஸ் இடையே பாதுகாப்பு குறித்த வருடாந்திர கூட்டம் இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

3. குஜராத் மாநிலம் காந்திநகரில் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

4. பங்களாதேஷ் புதிய பிரதமராக பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவர் திரு. தாரிக் ரஹ்மான் இன்று பதவியேற்கிறார்.

5. ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி **3-0** என்ற கோல் கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோன் இன்று முதல் இந்தியாவில் **3** நாள் பயணம் மேற்கொள்கிறார்.

இதற்காக மும்பை வந்துள்ள அவரை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று சந்தித்துப் பேசுகிறார்.

மக்கள் மாளிகையில் இன்று பிற்பகல் நடைபெற உள்ள இந்த சந்திப்பின்போது இந்தியா - பிரான்ஸ் இடையேயான கூட்டாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

புதிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

பிராந்திய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து பிரதமரும், பிரான்ஸ் அதிபரும் தங்கள் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உள்ளனர்.

அதைத் தொடர்ந்து இன்று மாலை இந்தியா-பிரான்ஸ் புதுமைக் கண்டுபிடிப்புகள் ஆண்டுக் கூட்டத்தை இரு தலைவர்களும் தொடங்கி வைக்க உள்ளனர்.

இதில் இருநாட்டு வர்த்தக தலைவர்கள், புத்தொழில் நிறுவன பிரதிநிதிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இதர கண்டுபிடிப்பாளர்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

இந்தியா - ஃபிரான்ஸ் இடையே பாதுகாப்பு குறித்த வருடாந்திர கூட்டம் இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ஃபிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் **Catherine Vautrin** ஆகியோர் கூட்டாக தலைமை வகிக்கின்றனர்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் ஒருங்கிணைந்து செயல்படுவது உள்ளிட்ட இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

ஹேமர் ஏவுகணைகளை இணைந்து தயாரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இதில் கையெழுத்தாக உள்ளது.

இந்தியா - ஃபிரான்ஸ் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேலும் 10 ஆண்டுகள் நீட்டிப்பதற்கும் வாய்ப்புள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்தை புதிதாக திறக்கப்பட்டுள்ள பிரதமர் அலுவலக சேவா தீர்த்தாவில் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் உடனான உரையாடல் சிறப்பாக இருந்தது என்று கூறியுள்ளார்.

பல்வேறு அம்சங்களில் அவருடைய நுண்ணறிவு சிந்திக்க கூடியது என்று தெரிவித்துள்ளார்.

திரு. ராம்நாத் கோவிந்த் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புதிதாக திறக்கப்பட்டுள்ள பிரதமர் அலுவலகமான சேவா தீர்த்தா, சேவை, இரக்கம், கடமை, நாட்டிற்கு முன்னுரிமை என்பதற்கான புனிதமான இடம் என்று கூறியுள்ளார்.

சேவை மூலம் நிர்வாகம் செய்வதற்கான சக்திமிக்க அடையாளம் இந்தக் கட்டிடம் என்று திரு. ராம்நாத் கோவிந்த் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

அதிகாரபூர்வ மொழி குறித்த நாடாளுமன்ற குழு அறிக்கையின் 13வது பகுதி தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அக்குழுவின் தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா புதுதில்லியில் நேற்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவிடம் வழங்கினார்.

<<<<>>>>

நார்வே சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அந்நாட்டு நிதியமைச்சர் திரு. **Jensstoltenberg**-ஐ சந்தித்துப் பேசினார்.

அப்போது வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம், குறிப்பாக நீலப் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மற்றும் ஓய்வூதிய நிதிகள் போன்றவற்றில் இணைந்து செயல்படுவதென இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முதலீடு செய்வதற்கும், வளர்ச்சியடைவதற்கும் பெரும் வாய்ப்புகளை அளிப்பதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

சூரியசக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க எரிச்கதி துறையில் இணைந்து செயல்படுவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

அப்போது பேசிய நார்வே நிதியமைச்சர், இந்த ஆண்டு இறுதியில் நார்வே வருகை தர உள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பயணம் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என்று தாம் நம்புவதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

புதிய ஆதார் செயலியை 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்துவதாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாள்தோறும் சராசரியாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பதிவிறக்கங்கள் மூலம் இந்தப் புதிய செயலியில் இதுவரை ஒரு கோடியே 40 லட்சம் பதிவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பான மற்றும் வசதிமிக்க மின்னணு அடையாள சேவைகளில் வளர்ந்து வரும் நம்பிக்கையை இது பிரதிபலிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய செயலி மூலம் 10 லட்சம் பேர் தங்களது மொபைல் எண்ணை புதுப்பித்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேங்களின் கூட்டுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் இன்று நடைபெற உள்ளது.

குஜராத் மாநிலம் காந்திநகரில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் கூட்டுறவு அமைச்சகத்தின் முன்முயற்சிகள் குறித்த ஆய்வு, இதுவரை நடைபெற்றுள்ள கூட்டுறவு மேம்பாடு குறித்த மதிப்பீடு, மாநில

அரசுகளின் சிறந்த நடைமுறைகள் உள்ளிட்டவற்றை பகிர்ந்துகொள்வதற்கான தளமாக இக்கூட்டம் நடைபெறுகிறது.

ஊரக பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் வகையில் 2 லட்சம் புதிய பன்னோக்கு தொடக்க வேளாண் கடன் சங்கங்கள், பால் மற்றும் மீன்வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

அரசு கருவூலத்தில் இருந்து ஒரு லட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலா தங்கம் காணாமல் போய்விட்டதாக பரவும் செய்திகள் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சமூக வலைதளங்கள் மற்றும் செய்திகளில் பரவும் இத்தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று பத்திரிகை தகவல் அலுவலகத்தின் உண்மை கண்டறியும் குழு கூறியுள்ளது.

மேலும் தங்க கருவூலங்களில் இருந்து எதுவும் காணாமல் போகவில்லை என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

நிதி தரவு தொடர்பான துல்லியமான தகவல்களை அறிந்துகொள்ள ரிசர்வ் வங்கியின் அதிகாரபூர் இணையதளத்தை காணுமாறு மத்திய அரசு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டுக்கான இடைக்கால பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இதைத் தாக்கல் செய்கிறார்.

இந்தக் கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தலைமையில் நடைபெறும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட உள்ளது.

நடப்பு சட்டப்பேரவையின் கடைசி கூட்டத்தொடர் இது என்பதால் இடைக்கால பட்ஜெட் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக மாநில திட்டக் குழு தயாரித்துள்ள வரும் நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை சென்னை

தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

<<<<>>>>

பங்களாதேஷ் புதிய பிரதமராக பங்களாதேஷ் தேசிய கட்சித் தலைவர் திரு. தாரிக் ரஹ்மான் இன்று பதவியேற்கிறார்.

இந்தியாவின் சார்பில் மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதைத் தொடர்ந்து பிற்பகலில் பிரதமரும், அமைச்சர்களும் பதவியேங்க உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கினற்ன.

அண்மையில் நடைபெற்ற பங்களாதேஷ் நடாளுமன்ற தேர்தலில் மொத்தமுள்ள 297 தொகுதிகளில் பங்களாதேஷ் தேசிய கட்சி 209 இடங்களில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் ஜமாத்தே இஸ்லாமி கட்சி 68 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

<<<<>>>>

இலங்கையில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு மதிப்பீடு செய்வதற்காக சர்வதேச செலாவணி நிதியத்தின் மேலாண்மை இயக்குநர் **Kristalina Georgieva** தலைமையிலான குழு கொழும்பு சென்றுள்ளது.

மூன்று நாட்கள் பயணம் மேற்கொள்ளும் இக்குழு இலங்கையின் மத்தியப் பகுதியில் புயலால் சேதமடைந்த பகுதிகளை பார்வையிடுகின்றனர்.

முன்னதாக இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயக, பிரதமர் டாக்டர் ஹரினி அமரசூர்யா, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் திரு. நந்தாலால் வீரசிங்க ஆகியோரை இக்குழு சந்தித்தது.

சேதத்தை பார்வையிட்ட பிறகு சர்வதேச செலாவணி நிதியத்தின் உதவிகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

மணிப்பூரில் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு இன்று தொடங்குகிறது.

அடுத்த மாதம் **20**ஆம் தேதி வரை நடைபெற உள்ள இத்தேர்வை **31** ஆயிரத்து **500**க்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதுகின்றனர்.

இதற்காக மணிப்பூரில் **117** தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மணிப்பூர் முதலமைச்சர் திரு. யும்னாம் கேம்சந்த் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி **3-0** என்ற கோல் கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை வென்றது.

--------------

வளரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய ஏ அணி இன்று நேபாளை எதிர்கொள்கிறது.

பாங்காக்கில் நடைபெற உள்ள இப்போட்டி காலை **8** மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**